# பலாங்கொட பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 பெப்ரவரி 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஆகஸ்ட் 21 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் பலாங்கொட பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பலாங்கொட பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அ) தகனக்கூடத்தை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது உள்நாட்டுக்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 1,030,000 தொகை கடன் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் இல. 3.81 மற்றும் இல. 3.82 என்ற வருமானத் தலைப்பில் செலவு வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) பட்டோலைகளின் பிரகாரம் சபைக்குரிய மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 16,400,000 ஆக இருந்த போதிலும் ரூபா 7,705,250 எனக் கணக்கு வைக்கப்படாமையினால் சொத்துக்கள் ரூபா 8,694,750 தொகை குறைவாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

**கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 27,350,900 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,382,684 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,903,683 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | ------------------- | ------------- | ------------- | ------------- |
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 551 | 384 | 265 |
| (ii) | வாடகை | 140 | 118 | 74 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 27 | 27 | 109 |
| (iv) | ஏனைய வருமானம் | 38,409 | 31,966 | 28,620 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 4,563,323 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 8,413,240 |

### 2.2.3 கடை வாடகை

-------------------------

2011 மற்றும் 2011 இற்கு முந்திய வருடங்களுக்காக வெலிஓயா பழைய கடை இல. 01 மற்றும் இல. 03 இலிருந்து அறவிடவேண்டியிருந்த ரூபா 19,938 கூட்டுத்தொகையான நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நில வாடகை

2011 திசெம்பர் 06 ஆந் திகதி வரையில் சபையினால் வாடகைக்கு விடப்பட்ட முகலான நிலத்துண்டுகளிலிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 50,500 வாடகைப் பணத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்

இரத்தினபுரி மாவட்ட விவசாயக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் பலாங்கொடை பிரதேச செயலாளரின் பொறுப்பில் இருந்த கல்தொட்ட கமநல சேவை நிலையத்தில் காணப்பட்ட உழவு இயந்திரம் மற்றும் 31 உபகரண விடயங்கள் என்பன 2010 ஆகஸ்ட் 23 ஆந் திகதி சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்கள் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதுவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்